# சித்திரை 16

## 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!!

## இதழ் ③





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# சித்திரை 16

## 108 ஞானுபவம்!
## 6 நீதிக்கதைகள்!!

## இதழ் 3

## பொருளடக்கம்


67. கணவன் மனைவி உறவு என்ன? 101

68. குடும்ப சஞ்சலம் வருவது எப்படி? 102

69. குடும்ப பிணைப்பு வருவது எதனால்? 103

70. எல்லாம் அவன் செயலாக இருக்க என் செயல் என்று எண்ணம் வருவது எதனால்? 104

71. நாமரூப பற்றா? நான் எனது பற்றா? 105

72. ஸ்ரீமாதா ஸ்ரீபிதா வரவு ஏன்? 106

73. இல்லற தர்மம் என்ன செய்யும்? பாகவத தர்மம் என்ன செய்யும்? 108

74. பர தர்மம் என எதை கூறுகிறீர்கள்? 110

75. இன்ப - துன்பம் ஆனந்தம் இவ்விரண்டின் நிலை என்ன? 112

76. காண்பவனாக இரு காட்சியில் மயங்காதே 113

77. ஸ்ரீராமனாக வாழ்ந்தால்தான் ஸ்ரீகிருஷ்ணனாகலாம்? 114

78. பொறுமை, நிதானம், அமைதி இவைகளை சோம்பல் என சொல்வதின் காரணம் என்ன? 121

79. நாமரூப ஜகத்தின் நிலை என்ன? ஈசன் நிலை என்ன? 122

80. சிவரகஸ்யத்திற்கு இந்த உபநிஷத் முந்தையதா பிந்தையதா? 128

81. மனதால் செய்வது எது? தூலத்தால் செய்வது எது? 133

82. ஆய மனோ நாசம், ஆய ஜக ஐக்கியம், ஆய பர ஐக்கியம் - விளக்கம் 134

83. பகவானுக்கும் பரத்திற்கும் என்ன வித்தியாசம்? 135

84. காம & காஞ்சனம் பற்றி ஸ்ரீபரமஹம்ஸர் சொன்னது 136

85. நான், நாம், யாம் - விளக்கம் 139

86. இரு குணமும் இழந்து அமல ஸத்வ மேலாகி பகவானை காணலாம்- விளக்கம் 140

87. ஜகம் விவகார ஸத்தியம் என்றால் அதன் விளக்கம் என்ன? 141

88. வருத்தம் இல்லை எதனால்? வருத்தம் தோன்றுவது எதனால்? 142

89. நினைவற்ற நிஷ்டை கூடுவது எப்படி? 144

90. பேதம் அறுபட என்ன செய்ய வேண்டும்? 145

91. தற்போதமும் சூனியமாய் குற்றம் குறை தீர்வது எவ்வாறு? 146

௧௨. விறகு முடிந்து அக்கினி ஸாந்தி ஆவது. இது எதைக் குறிக்கிறது? 1௫7
௧௩. அங்க சுத்தி, சித்த சுத்தி, ஞானஸித்தி - விளக்கம் 1௫8

எல்லாம் நீ!




இக்கலியுகத்தில் (101)
திருமணம் என்றால்
குழந்தை குட்டிகள் பெற்று
வளர்த்தும், அவைகளை வளர்த்து
வாழும் வாழ்க்கையே!
கணவன் மனைவி உறவு என்றாகிவிட்டது
பக்தியோ! ஞானமோ! முழுமையாக மறந்து
விட்டது. இல்லற மனைத்துக் கொண்டது.

(67)

# கணவன் & மனைவி உறவு என்ன?

கணவன் & மனைவி! என்ற நாம ரூபமே! தந்தை! தாய்!
என காலக்கிரமத்தில் மாறுகிறது.
இங்கு தந்தை! (தாய்) முந்தையவரா? தனயன்!
முந்தையவரா? என கேள்வி கேட்டால்?
தந்தை (தாய்) இல்லாமல், தனயன் பிறக்க முடியாது
தனயன் பிறக்காமல், தந்தை (தாய்) ஆக முடியாது.
இது வெளக்கிக வாசகம் ஆகும். இதன் உண்மை:-
கணவன்! குழந்தையை கொடுக்கும் **கருவி!** அல்ல
மனைவி! குழந்தை பெறும் **பெட்டகம்!** அல்ல.
இவ்விருவரும் **வினையால்!** இணைந்த நிழியவேறு
**மனதால்!** பிரிந்த ஜீவியவேறு?
(சாதனையால்)
" **இறைவா!** உணர்வை வென்று ஜீவன் முக்தி!
அடைய வந்தவர்களே. வாழ்வு என்றால் அது நரகம்.
சாதனை என்றால் அது மோட்சம். எதிர்பார்ப்பால்
ஏமாற்றமும்! தடுமாற்றமும்! (ஜனன மரணமும்) உண்டாகும்
என உணர்க.



மன அசைவே சஞ்சலம்! (102)
என்றும் ஸம்ஸாரம்!
என்றும் பேசப்படும்.
இம்மன அசைவு! சிற்றின்ப
நுகர்ச்சியின்
மோஹ வேகத்தால் உண்டாவதாகும்.
சம்சாரப்பணம் இன்றே இதை நாசம் செய்.

(68)

குடும்ப **சஞ்சலம்** வருவது எப்படி?

குடும்பி! என்றாலும், ஸம்ஸாரி! என்றாலும் ஒன்றே! ஸம்ஸாரி! என்றால், தானும் அசைந்து தன் முன்னால் உள்ளதையும், அசைப்பதாகும். இதன் மூலம் **மனமே!** நாம் அசைவது என்பது, ஆசை & தேவை! தேவை & ஆசை! என மொழிப்படும். முன் உள்ளதை, அசைப்பது என்பது! ஜட சொரூபத்தை **மனைவியை** இன்ப துன்பமாய்! பாவனை செய்து, நாம ரூப குணத்தோடு, கற்பனையில் வாழ்வதாகும். இது பழக்க (பேச்சு) & வழக்க (செய்கை) தோஷத்தில் விளைவதாகும்.


பேச்சைக் குறைப்பது! போக்கு வரவைக் குறைப்பது! கொடுக்கல் வாங்கல் குறைப்பது! (நிறுத்துவதால்) இவைகளால் இச் சஞ்சலத்தை நாசம் செய்யலாம். இதன் வித்து! நான்! எனதாகும்! இவ்விரண்டையும் நாசம் செய். (சஞ்சலம் தீரும்)



ஒவ்வொரு மனித ஜீவனும்!
அவரவர் வினையை! (103)
ஏற்று
குடும்ப பிணைப்பை போல்
தோன்றி, ஒழுங்காக நடிப்பது
போல் தெரியபட நடிப்பது!
மனதின்! வினையை
இ மாயா! ஸ்ரீ பகவான் ஆதியாய் இருந்து
கொண்டு இயக்குகிறது. வேஷத்தை மனிதராக எண்ணுவது
மனதின் குறையாகும். (69)

குடும்ப பிணைப்பு வருவது எதனால்?

உறவு! சுற்றம்! நட்பு! இம்மூன்றிலும், அதிக
பற்றுக்கொண்டு! இவை இல்லாமல், வாழ்வு இல்லை!
அதாவது நாம் கூப்பிட்டவுடன் கூடி வருவதும்!
நம் தேவையை பூர்த்தி செய்வதும்! நம்முடன்
நடமாடுபவர்களாயும்! இருப்பவர்கள் இவர்களே!
என்ற நாமரூப பற்றே, இப்பிணைப்பாகும்.
வைராக்கியத்தால்
இவர்களை விலக்கிப் பிணைப்பால், ஒட்டியவர்கள் ஜீவனும்,
தெய்வீகத்தியால் அந்தந்த ஜீவ! வேஷம்
போட்டுக் கொண்டு, ஸ்ரீ பகவானே! நடிக்கிறான் என்பதும்
வினை முடிந்தால், அந்தந்த வேஷம் கலைந்துவிடும்" ;
இவர்களை, சொந்தம் கொண்டாடும், மனப் பற்றே
வினையின் வித்து என, உணர்ந்த ஞானியர், வினை
சர்வார்ப்பணமாவதால் செய்து அந்தரங்க பிணைப்பு
நாசமாகும். அங்கு அதிசய சந்துக்கள் இயல்பாக
தோன்றுவர்.



மின்சாரத்தின் (104)
இயக்கத்தை!
மிக்ஸி, கிரைண்டர்!
இயக்கம் என சொல்லமுடியாது
சொல்ல கூடாது. அதேபோல்
சூட்சும ஸ்ரீபகவானின் இயக்
கத்தை மறந்து, நாமே
செருப்பங்கள்! இயங்குகின்றன என்னுவது

(70) ஜீவ ம ன ம் ட மை யா கு ம்.

எல்லாம் **அவன்!** செயலாக இருக்க,
**என்!** செயல் என்று, எண்ணம் வருவது ஏனோ?

அவன்! என் மனக் கண்களுக்கு, தெரியவில்லையே.
நான்! என்னைக் காண்கிறேனே! ஆகவே **நான்!**
**என்!** செயல் என்று கூறுகிறேன், மனம் வசப்பட்ட
**மனிதன்!** (அவன் பேசவில்லை. மனம் பேசுகிறது.)

மின்சாரம்! கண்ணுக்கு தெரிகிறதா? அதைப்
போலவே, ஸ்ரீபகவானும் கண்ணுக்கு தெரிவதில்லை.
தெரியமுடியாது. கிரைண்டர்! மிக்ஸி! ஓடுவதை
வைத்து, அவை (மனிதன்) இயங்குகின்றன என்று
சொல்லமுடியாது. சொல்லக்கூடாது. ஆனால் பல்பு
ஜோதி
எரிவதை வைத்து, ஸ்ரீபகவான்
வழிவானவன்! என, அறிவால் நாம் வேண்டும்.
குறிப்பு:- இது காணும் பல்பு போன்றதல்ல. தன்
உள்ளத்தில், ஒளிரும் பிரகாசமாகும்.



இங்கு இம் மனதின் விசேஷம் என்ன வென்றால்:- நாம ரூபத்தை உண்டு பண்ணுவதும், மனமேயாகும். அந்த நாம ரூபங்களில் நான்! எனது! என சொந்தம் கொண்டாடி தோஷ குணங்களுக்கு ஆளாவதும் அற்ற நிலையில் மனமேயாகும். நாம ரூபம் அதுமன்றாகியமாமே. மனமே அறிவற்ற, ஜடமும், இல்லாமல் (105)

(71)

# நாமரூபம்/ பற்றி? நான்/எனது/ பற்றி?

நாமரூபம் இல்லாமல் நான்/ எனது/ தோன்றாது. தோன்றவியலாது. அதாவது. ஓர் தோற்றம் உண்டானால், நான் அதை சொந்தம் கொண்டாட, மனம்/ உண்டாகும். அச் சொந்தமே, பந்தம் ஆகும். அதாவது பற்றாகும். மற்றோர் நிலையில்.

நான்/ எனது/ கெட்டு நாசமானால், அங்கு நாமரூபம் அழிந்தும்/ ஜடம்/ ஆகிவிடும். ஜடநிலையில், எதுவானாலும், அழிந்தும் ஏவராலும் மனமே நாமரூபம்/ தோற்றுவிக்கிறது. நான்/எனை [மனம்] என சொந்தம் கொண்டாடுவதும், மனமே/ மூலகாரணம் ஆகும். இந்த மனம்/ மறைந்தால்/ அறிவானவன் நாமரூபமும் இல்லை. நான் எனதும் இல்லை. இங்கு சர்வார்ப்பணை ஒன்றுவே, இதை பெறமுடியும் இங்கு பிரம்மார்ப்பணை ஒன்றேவே, பரம் ஆகமுடியும்.



166

இன்றைய ஸ்ரீமான்! ஸ்ரீமதி! யானவர்கள் கலியுகத்தின் ஒரு படி, பாடம் பட்டம் பதவி பணம்! என மோகத்தில் விழுந்து விட்டதால், அவர்கள் தாமஸின் மொத்த உருவமாகி விட்டார்கள். இனி இதை மாற்றவோ விலக்கவோ முடியாது.

72

# ஸ்ரீமான்! ஸ்ரீமதி! வரவு ஏன்?

ஸ்ரீ அன்னை என்பது, இறை அன்பை ஊட்டுவதாகும்.

ஸ்ரீ தந்தை என்பது, பர அறிவை வளர்ப்பதாகும்.

இதுவே முந்தைய மூன்று யுகங்களிலும் நடந்தது.

ஆனால் கலியுகத்தில், அப்படி நடைபெறாது.


ஆனாலும், அப்படி நடந்தவர்கள்! பாக்கியவான்கள்.

மாறாக இன்றைய, ஸ்ரீமான்! ஸ்ரீமதி! இருவரும் தம் குழந்தையை! இட்டுச் செல்லும் பாதை! எப்படி அமைந்து விட்டது என்றால் :- பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! பணம்! பகட்டு! அந்தஸ்து! கௌரவம்! புகழ்! கீர்த்தி! வாழ்க்கை இவைகளில் செய்து! கலியானாம் கலியை கவ்வும்படி செய்து புத்திர இன விருத்தி! தாமஸ வின் பெருக்கம் செய்து சேவை! மைமறந்து (மறைத்து) வேலையே! பசியும்! என உண் பிறவியான்.



ஒ ஒருவயது முதல் (107)
10 வயது வரை!
குழந்தைகளுக்கு
இது என்ன? இது என்
றோ
என்ற பேத பாசை!
பார்வையை உருட்டி
துவேஷ நெருப்பை அள்ளி
கொட்டி விஷய போகத்தை ஊட்டி! ஸ்ரீமாதா
ஸ்ரீ பிதா! மற்றும் அனைவரும் குழந்தையை
கெடுக்கின்றனர்.

அதர்ம வழியில், பலவந்தமாக
புகுத்தியும், உறவு! சுற்றம்! நட்பு! இவைகளை
சுட்டிக்காட்டி, இவர்கள் இ ல் லா ம ல்
உ ன க் கு வாழ்க்கை! இல்லையென,
ப....ய....மு....று....த்தி
யும்
இருளான பேயை! அறையச் செய்தும்.
ஜனன மரண! படுகுழியில் தள்ளி விட்டு நாம்
ஆனந்தம்! அடைய வழி. இன்பம்! அடை
கின்ற
இன்பமே துன்பமாக முடிகிறது. னர்.
இதை அம்மாக்களே! பிதாக்களே! என்ன சொல்கிறீர்கள் என்றால்
எங்கள் குழந்தைகளை! நன்றாக வளர்க்கிறோம் என்கின்ற
பாதாளம் போன்ற படிப்பும்! பட்டமும்! பணமும்! னர்.
காட்டி எம் கலி தேவன்! இப்படி ஏமாற்றுகிறான்
பா/வம்! ஸ்ரீ மாதா! ஸ்ரீ பிதா!!!




இல்லற தர்மம் என்ன செய்யும்?

[illegible] தர்மம் " " ?

இல்லறதர்மம்! என்பதை, முறையாக அனுஷ்டிக்க வில்லையாயின், அது இல்லாத தர்மமாது! அதாவது பயனற்ற தர்மமாக! அதாவது அழிவுப் பாதையை! நோக்கி செல்லும் வழியாகவும் மாறும்.

இல்லறதர்மத்தை! முறையாக அனுஷ்டித்தால், அதுவே பத! முக்தியாகவும்! அதுவே பர! முக்தியாகவும்! மாறி, ஒளி மார்க்கத்தை காட்டும்.

ஆகை இருந்தால், தன் தாவம் அழியும் வரை! தம்முடைய ஸ்ரீமான்களோ! ஸ்ரீமதிகளோ! தாவம் இருக்கும் வரை! உணவு, உடை, இருப்பிடம், இவைகளில், எந்நேரமும் இல்லாமல் கொடுத்து போற்றி, மாதுகாத்து சேவை செய்வது அதுவே கடமையாகும்.



109

வீட்டில் உள்ள
மாமன்! மாமி!
அம்மா! அப்பா!
இப்படி பெரியவர்
களுக்கு மனம் உவ
ந்து சேவை செய்தால்
அக்குடும்பம் இல்லற
தர்மத்தில் உயரும். பெரியவர்கள் ஒரு
வீட்டின் தூண்போன்றவர்கள் ஆவர்.

பெண்கள் இருந்தால், திருமணம் ஆகும் வரை,
ஸ்ரீமாதா! ஸ்ரீ பிதா! சேவையும், திருமணம் ஆனபின்
ஸ்ரீபதி சேவையும் குறைவின்றி செய்ய வேண்டும்.
ஓர் குடும்ப பெண்ணுக்கு, ஸ்ரீபதியே! கூடவே தெய்வமாகும்
ஸ்ரீபகவானின் அருட்சந்நிதியாகும்.

ஸ்ரீபாகவத தர்மம் என்பது, **பக்தி!**

(கணவன் மனைவி) இருவரும் இணைந்த நிலையில்,
இறை அன்பர்களுக்கு மட்டும் உடலாலும், பொருளாலும்!
இயன்ற உபகாரம் செய்யும் போது இவருக்கோ
இன்னொருக்கோ! என்றெண்ணமல் ஸ்ரீபகவானுக்கே
செய்கிறோம், என்ற மெய் உணர்வோடு செய்ய
வேண்டும் அங்கு, எந்த எதிர் பார்ப்பும் கூடாது
இல்லற தர்மமும்! ஸ்ரீபாகவத தர்மமும்! இணையும் போது
அவசியம் பக்தி உண்டு. நிலைகண்டு, ஸ்ரீ
ஸத்குருவை காட்டி, பரமுக்திக்கும் அவசியம்
வழி வகுத்து கொடுக்கும்.



பரசொரூபமானது
இல்லாத ஒன்று (110)
கவும், அதுவே
அது இல்லாமல்
எதுவும் இல்லை யென்
பதிலும் அவ்விரு
பிறை இல்லாத தர்மமும்! தெய்வீகதர்மமும்
உணர்த்தும் நிலையிலா உண்மையும்

74

பரத்திற்கு! எந்த தர்மமும் இல்லையே!

பர தர்மம்! என்றும் எதை கூறுகிறார்கள்?

தர்மம் என்பது இரண்டு வகையே! அவை முறையே,
லௌகீக தர்மமும்! தெய்வீக தர்மமும்! ஆகும்.
இத் தெய்வீக தர்மத்தில் ஸ்ரீ பாகவத தர்மமும் இணையும்.

தாவாதது பரத்திற்கு! தோற்றமும்,
அது இப்படி இருக்கிறது என்ற இருப்பும்! அது
இன்ன செய்யும் என்ற இயக்கமும்! இல்லாத ஒன்றே!
அதுவே உவமானமாக, அகண்ட பரவெளி மண்!
என்றும் அகண்டானந்த சச்சிதானந்தம்! என்றும்,
உபசாரமாக சொல்வது போன்றும் லௌகீகமும்!
தெய்வீகமும்! இதைக் குறியாயில்.
லௌகீக! ஐ க ம ய க் க த் தை யும்!
காட்டாமல்




இவ்வாறு ஜீவனும்! (111)
தெய்வீக ஈசனும்!
இணைந்து
இது இப்படி இருக்கிறது
என்று உணர்ந்தால்
விட்டால்! அதை எப்படி
உணர்த்துவார்? பரகதியின் ஸ்வரூபத்தில்
வாழ்விட்டாலும் இதன்
மேலாக அது தவறிக்காது!

தெய்வீக ஈசு! தோற்றப்ப ய த்தையும் ஸ்ரீ பகவத்! பிரேமையின் மயக்கத்தையும் காட்டாமல்!

இவ்வாறண்டையும் (போகத்தையும்! தெய்வீகத்தையும்!) முறையே பொம்மலாட்டமாகவும்! பொம்மையாகவும்! பின் ஸ்வய அநுபவத்தில் எல்லாம் மண்ணே! என்ற உணர்வைக் கொடுப்பதாகும்.

பரமும்! மாயாவும்! இணைந்ததே ஸ்ரீ பகவானாகும்.

அங்கு விளையாட்டின் மாயாவைத் தன்னியற்கையால்
பரமம்/ பகவானும்/ நாமும்!
ஒன்றே என்றுணரும், பேரறிவே/ பரத்மமாகும்.
என ஸ்ரீ மஹான்கள் பாயிரமாக அறிகிறோம்.



இன்ப துன்பம் (112)
தோன்றும் வரை
ஆனந்தம் தோன்றாது
என்பதும் நாமரூபம்
தோன்றும் வரை ஆனந்
தம் தோன்றாது எனவுணர்
நாமரூபம் பதுமையாகி விட்டால் ஆனந்தமும்
எல்லாம் மறைந்துவிட்டால் பிரம்மானந்த தோன்றும்


(75)

# இன்பதுன்பம்! ஆனந்தம்!

## இவ்விரண்டின் நிலை என்ன?

இன்ப துன்பம் :- இவ்விரண்டும் ஒன்றே! ஓர் நாணயத்தின் இருபக்கம்! போன்றதாகும். இவற்றின் சுவை, புண்ணிய பாபமாகவும்! ஜனன மரணமாகவும்! சூழ வரும்.

ஆனந்தம்! என்பது இரண்டற்ற ஒன்றாகும். ஆனவ், இவ்வானந்தம்! தெய்வநிலையில், பேரானந்தம் பரநிலையில்! பிரம்மானந்தம் என்றும். என்றும். சொல்வர். இதன் ஓர் உண்மை என்னவென்றால், இன்ப துன்பம்! தோன்றும் வரை, ஆனந்தம் தோன்றாது. ஆனந்தம் உணர்ந்து அனுபவித்து விட்டால், இன்பதுன்பம் வந்ததோ! அதை அனுபவித்ததோ! அது அழிந்து மறைந்ததோ! தடயமே! இராது என்பதே சத்தியம். இன்ப துன்பம் என்பது மனோவிகாரம் ஆகும். ஆனந்தம் என்பது அ னா வு ரூபே ர ஜா வி ன்! ஸ்வய அனுபவமாகும்.



அறிவாக இருந்தால்!
நாம ரூப ஜக
ஜீவ மயக்க
தோஷம் இராது.

113

மனமாக இருந்தால்
காண்பதிலும்! கேட்பதிலும்
அதுமட்டுமின்றி பேசுவதிலும் ஜீவ மயக்கம் உண்டு
அதனால் ஜனன மரணமும் உண்டு.

76

காண்பவனாக இரு! காட்சியில் மயங்காதே!
காண்பவனாக இரு என்றால், ஸ்ரீபகவானாகிரு என பொருள்படும். அதாவது அறிவாக இரு! என உணர்வாயாக. ஆனால் மனமாக இராதே என பொருள் கொள்.
ஸ்ரீ கண்ணன் எம் பார்த்தனுக்கு சொன்ன ஓர் வாக்கு பார்த்தா! இவ்வுலகை சலனமின்றியவன் அங்கு நிமித்தாகவே இருப்பாய் என்றான்.
இதன் உண்மை என்னவென்றால்? நாம ரூபமாக கண்டால் ஆசையும் & அசைவும்! மனதின் குணம் உண்டு.
பதுமைகளாக கண்டால், ஆசையும் & அசைவும்! மனதின் குணம் இல்லாமல், எல்லாம் எம்முடையது என்ற நிலையில், ஆசையும் & அசைவும்! இல்லாமல் அறிவாகவே இருப்போம். அங்கு எந்த சந்தேக தாக்க கலக்க பயமும் நாசமாகும்.
மயக்கமற்ற ஆனந்தமானகவே இருப்போம்.



எல்லோரும் நல்லவர்களே 114 நம்மவர்களே என்ற நிலையில் மனம் அசைவற்று ஆசையற்று நின்று விட்டால் நாமரூபம் புதுமை! கறைகை

77

ஸ்ரீராமதை! வாழ்ந்தால் தான் ஸ்ரீகிருஷ்ணதைகளாம்!!!

ஸ்ரீராமன் வாழ்ந்த காலம், பக்திய தர்ம யுகமாகும். ஸ்ரீகிருஷ்ணன் வாழ்ந்த காலம், கலியுக ஆரம்பமாகும். இங்கு **யுகம்**! முக்கியமல்ல. **மனமே**! முக்கியம். மனதை ஒன்றுபடுத்தி விட்டால், காலமும் யுகமும் ஒன்றுபட்டு விடும்.

மனம் சபலத்தில், வீழ்ந்து விட்டால், அங்கு காலமும் யுகமும்! பொறுப்பாகாது. மனமே பொறுப்பாகும். இம்மனதிற்கு, யுக்தி பாவம் தந்த பகுதி! என்ற வாக்கியம் பொருத்தமாகும். ஜகவாஸ பழக்க வழக்க தோஷத்தை! நிறுத்த முடியாது

**ஞானத்தால்**! மனம் அவசியம் [illegible].



மறுபிறம் 115
பின் ஸ்வய
அனுபவத்தில்
எல்லாம் இயக்கமற்ற
பிரயோஜனமும் அற்ற
மயமாகி
மணி
மனமான எந்த முயற்சி! முயற்சியும்
இல்லாமல் நாம் அதுவாகவே இருப்போம்.

(ஒரு சொல்) ஸ்ரீராமன் ஸத்தியம் பேசி, தர்மத்தை நிலைநாட்டினான்.
(ஒரு இல்) ஒருவனுக்கு ஒருத்தி! ஒருத்திக்கு ஒருவன்! என்ற
ஒழுக்க! கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தான்.
(ஒரு வில்) நீதி! (பரிபாலிப்பதில், நன்மையே!)
அர்ப்பணம் செய்தான். இதன் மூலகாரணம்:-
ஸ்ரீஸத்குருவின் (ஸ்ரீவஷிஸ்டரின்) வாக்கிய சிரத்தையால்
ஆழ்நம்பிக்கையால், வைராக்கியமுடன் இருந்தான்.
இம் முயற்சி & முயற்சியின்றி ஜீவ அனுபவமானது
ஸ்ரீ கிருஷ்ணரது போட்ட வேஷத்தில் ஆதன்மையான
வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! எனும் முன்றினை நிஜியால்
கபட நாடக சூத்திரத்தை!
வெகுநேர்ப்பட நடித்து முடித்து, ஆத்மஞான வித்தாக்கி விட்டு
ஒருவன் ஸ்ம் தன் கை | மதுமையாக தம்மை ஆக்கி கொண்டான்
அவனுக்கு இனி ஏக கர்மாவும் | இல்லாமல்
மாயா நடத்தி முடித்து விடும்.



(116)

நாமரூபம்! பொய்யான பந்தக் கவக்க பய மின்றி உணர்ந்து விட்டால் வாக்கும் பொய்! அதன் செயலும் பொய்! இவ்விரண்டிற்கும் ஆதாரமான மனமும்! பொய்யாகும். நாமரூபமும்! அற்ற நாம ரூபமும்! தேவரும் வரை! ஐக்கிய தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

# கபட நாடக சூத்திரம்! என்றால்:-


சத்தியம் பேசுவது போல், ஓர் **பொய்யை!** பொருந்தப் பொருந்திப் **பேசச்** செய்து **வினை** உடல் **விதியால்!** முடியச் செய்ய தாரகம்.

பாரதப் போரில் ஓர் சம்பவம்.

அன்று துரோணரின் கதையை நாவத்தை முடிக்க வேண்டும். இங்கு நம் திருடன் என்னும் கண்ணன்! செய்த ஓர் சூழ்ச்சி.

கண்ணன் என்றால், வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! எனத்தகும். போர்க்களத்தில் வைத்து, யுத்தம் நடைபெறும் போது துரோணரின் காதுக்கு கேட்கும் நடையில் நம் தர்மத்தின் சொரூபமான! தருமரை! ஓர் வார்த்தையை சொல்லச் சொன்னான் கண்ணன். அவ்வார்த்தையாவது

# அஸ்வத்தாமா அதஹ



ஓர் ரகஸ்யம் உணரவேண்டும்

தோற்றத்தில்

**மாயா** (117)

நாமரூபத்தில்

**மனம்** நாமரூப


பின்னுக்கு **ஞானம்**

இந்த ஸ்ரீபகவானையன்

மாயாவை உடையவனவான். மாயா மனதை உடையவும். மனம் குணத்தை உடையது ... அறிய வேண்டும்.

இவ்வார்த்தையின் அர்த்தம் :- அஸ்வத்தாமன் போரில் வீழ்த்தப்பட்டான் என்பதாகும்.

நம் தர்மர் அங்கும் இங்கும் பார்த்தார். வெகு தூரத்தில் துரோணரின் மகன் அஸ்வத்தாமன் போர் செய்து கொண்டிருந்தான். தர்மர் அவனைப் பார்த்தபின் கண்ணனிடம் கேட்டார். ஆமாம் கண்ணா, அதோ போர் செய்து கொண்டிருக்கும் அஸ்வத்தாமன் இருக்கிறானே. அவன் மடிய வில்லையே. பின் எப்படி இவ்வார்த்தையைச் சொல்ல முடியும் என்றார் தர்மர்? உடனே கண்ணன், அவ்விடத்தை விட்டு அகன்றான். போர்புரிந்து கொண்டிருக்கும் பீம சேனனிடம், சென்று ஹே பீமா, அதோ அந்த யானை யாருடையது? என்றான். அது துரியோதனனுடையது என்றான் பீமன். அந்த யானையின் பெயர் என்ன என்றான் கண்ணன். அதன் பெயர் அஸ்வத்தாமன் என்றான் பீமன். அந்த யானையை, ஒரே அடியில் அடித்து வீழ்த்து என்றான் கண்ணன். பீமனும் மறுவார்த்தையும், காரணமும் கேட்காமல் அந்த யானையை ஒரே அடி அந்த யானையின் தலையில் அடித்து அதை வீழ்த்தி விட்டான்.



ஸ்ரீபகவான்! நம் மாயையை! வைத்து அதன் மனமும் அதன் நிலையும் எப்படி செயல் படுகிறது என, வெகு அறியசமாகவே உணர்ந்து, செயல்படுவதே விழிப்பு என்ற தோழி

118

துணைவர்கள் கண்டு கொள்ளவும். நம் மாயாவை வைத்து அது வழமுள்ளதுக்கு வேறொரு விழிப்பின் உண்டு பண்ணி அழிக்கவும் முடியும்.

திருஷ் நம் கண்ணன்! நம் தர்மரிடம் வந்தான்.

கண்ணன்:- ஓ தருமநந்தனா! அதோ பாரும் அங்கு ஒரு யானை! துடிதுடித்து சாகப் போகிறது. அந்த யானையின் நாமம் என்ன? அது எவருடையது?

தருமர்:- அந்த யானையின் நாமம் அஸ்வத்தாமா! அது நம் துரியோதனனுடையது. பாவம் யாரோ அதை வதம் செய்து விட்டார்கள். போகும் விதி எப்படி எப்படி எல்லாம் முடிக்கிறது கண்ணா (என அனுதாபப்பட்டார் தருமர்)


கண்ணன்:- இப்போது தாங்கள் சொல்லவாமே! அஸ்வத்தாமா; அதனை; குஞ்சரனை! என சொல்லுங்கள் என்றான் கண்ணன்.

தர்மர்: (நம் கண்ணன் கட்டளையின்படி)

# அஸ்வத்தாமா அதஹா குஞ்சரஹா

எனக்கூறி, உரக்கச் சொன்னார். இங்கு நம் கண்ணனின் சூழ்ச்சி! எப்படி வேலை செய்தது என்றால் அஸ்வத்தாமா அதஹா! என்னும் வார்த்தையை மட்டுமே! ந ம





119

அதர்மத்தை அழிக்க தர்மம் பயன்படாது. ஆனந்தத்தை கொடுப்பதே தர்மத்தின் தன்மை இன்பதுன்பத்தை தர்மம் கொடாது. அதர்மம் மனதின் விகார / விபகாரகுணங்களாகும். ஆகவே அத்துணைக்கும் அத்துணையைக் கொண்டே அழிக்க வேண்டும்.

துரோணரின் / செவியில் புகச் செய்து, குஞ்சரஹ! என்ற வார்த்தையை / மட்டும் அவர் செவியில் புகாவண்ணம் மாயாவலை / சூழ்ச்சியால் மறைத்து விட்டான் கண்ணன்.

இந்த ஒருவார்த்தையை / அஸ்வத்தாமா அதஹ என்பதை தர்மத்தின் சொரூபம் தர்மர் / வாக்கால் கேட்டவுடன், நமக்கு ஈமக்கடன் செய்யும், மகன் போய் விட்டான். அவனுக்கு கடன் செய்யும் நிலையில் நாம் ஆகாது வேண்டாம் என நாம் ஓர் பதுமை / போல் அசைவற்றவரானார் துரோணர்.

கண்ணன்:- திருஷ்டத்யும்னா! அதோபார்! துரோணர். உன் தந்தையை அழித்தவர். சிலைபோல் அசைவற்று நிற்கிறார். இதுதான் தருணம். அவரை அழித்து விடுவாயாக என்றான் கண்ணன். உடனே திருஷ்டத்யும்னனும் அஸ்திர சஸ்திரங்களுடன் சிலை போல் நின்ற துரோணரை கண்ணன் கை பதுமையாக இருந்து, அழித்து விட்டான்.



காரணம்! காரியத்திற்கு!

ஆதாரமாக இருந்து காரியத்தை (120)

முடித்ததும்! தான் உடனே மாறும்! அவ்வது மறையும்!

இது நம் கண்ணனுக்கு வந்த கல்யாணம். என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இங்கு நம் கண்ணனின், சூழ்ச்சியும்! வஞ்சகமும்! பொய்யும் மெய்யான தன்மையும் எப்படி விளையாடுகிறது என்றால்?

அஸ்வத்தாமன்! காரணம்! ஆக்கி.


அஸ்வத்தாமன் என்ற யானையை! காரியம்!,,,;

துரோணர்! என்ற பகைமையை! கண்ணன் என்ற வீரன்

உலக கோட்டத்திலிருந்து, அகற்றி விட்டான்!

இங்கு பொய்யும், நேர்மைகள் மெய்யாகவே!

பிரகாசித்து. காரியம் முடிந்ததும். பொய் மறைந்தது! மெய் பிரகாசித்தது. இதைப்போல், அனேக இடங்களில், வாழ்வுள் எங்கெங்கு உள்ளதோ. அங்கங்கு தானும், ஓர் வழியுள் நின்று தாங்கி, அம்முள் நின்று, அகற்றி விட்டு இம்முள் நின்றும்! தூர எறிந்து விடுவான். இதுவே நம் கண்ணனுடைய, கபட நாடக சூத்திரத்தின்! செயலாக பக்தியத் தர்மத்தை, பாதுகாத்த கல்யாணம் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



நான் செய்கிறேன்
நான் செய்வேன்
என்னால் முடியும்
என்றுவே முடிந்தது
எனமார்தட்டிக் கொண்டு, ஆக்கிரோசம்
அவசரம்! படுவேகம்
என அழியும்

பாதையை நோக்கி அதிவேகமாகப் போவதால் பொறுமை! நிதானம்! அமைதி கெட்டு மூழ்கிவிடும்.


**78**

பொறுமை! நிதானம்! அமைதி! இவைகளை **சோம்பல்**! என சொல்வதன் காரணம் என்ன?

மேலே சொன்ன மூன்றையும், அனுஷ்டிக்க இயலாத தன்மையினால், அறியாமையின் **மனிதன்** அவ்வாறு கூறுகிறான். இவனிடம், எதிர்பார்ப்பு! **அதிகமாக**! இருப்பதால், அவ்வாறு கூறியே ஆக வேண்டும்.

பொறுமை என்பது எதையும் நயமென ஏற்றுக்கொள்வதாகும்.
,, ,, எதையும் எவரையும் குற்றம் குறை பாராட்டாமையாகும்.
நிதானம் என்பது உன்னையே ஒப்புகவாறுக்கே அர்ப்பணம் செய்வதாகும்.
,, ,, உன்னை தானம் செய்வது (சர்வார்ப்பணம்) ஆகும்.
அமைதி என்பது நாமாக வீண் கற்பனை செய்யாமை ஆகும்.
,, ,, வேதனை, விருப்பு வெறுப்பு கொள்ளாமையாகும்.

இவை மூன்றும் ஸத்வகுணமாக இருப்பதால், இன்றைய கலியுக மனிதன் ரஜோ, தமோ குண வசப்பட்டு, அம் மூன்றையும்! அதுவும் கையாலாகாதவன் செயல் என்றும், சோம்பேறியின் செயல் என்றும், ஒன்றும் செய்ய இயலாதவன் என்றும், இகழ்ந்துரைத்து தானும் அழிவு பாதையை நோக்கி வேகமாக செல்கிறான்.



மண்ணாக இருக்கும்போது இருக்கிறது! (122)

என்ற கணிதத்தின் மட்டும் இருந்தது.

அதுவே!

பாறைகளாக மாறும் போது அது! அதுவாக இருக்கிறது.

(79)

(1) நாமரூப! ஜகத்தின் நிலை என்ன?

(2) நாமம் ரூபம் கடந்த ஈசன் நிலை என்ன?

சற்று விளக்கமான விளக்கம் தேவை ????

(1) நாமம்! என்றால் பெயர் ஆகும். ரூபம் என்றால் உருவம் ஆகும்.
நாமம் அழிந்ததா? ரூபம் அழிந்ததா? என விசாரித்தால்
நாமம் அழிந்தது என்றும் ரூபம் மறைந்தது என்றும்.
ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிந்தோம். எப்படி என்றால்?

நாமாதீத பரம்! இதன் உவமானம் மண்! ஆகும்.
இம்மண்ணானது தம் விளையாட்டின் நிமித்தம்.

இணைந்து! பிரிந்து! இருக்கும் போது!

ஓர் ஒலி (சப்தம்) உண்டானது. அச்சப்தமே!
நாதம் என்ற பிரணவம் (ஓம்) ஆனது.

என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிந்தோம்.
அவ்வொலியின் பின்னே, அதைச் சார்ந்த ஓர் தோற்றம்,
உண்டானது. என ஸ்ரீமஹான்கள் சொல்வார்.



என்ற தோற்றமும்

தோற்ற(ம்) இருப்பும் உடையதாயிற்று

அதுவே மாயா

வின் உதவியால்

வடிவத்திற்கு உரியபாதைகளாகிறான்

மனதின் உதவியால், நாம ரூபம்

அத்தோற்றமே பாதைகள் ஆகும் என உணர்க.

அவ்வொலியால் பெற்ற தோற்றமும் அத்தோற்றத்தின், (தோற்றமும்) (இருக்கிறது என்ற) இருப்பும் மட்டுமே ஆகும் எனவுணர்க.

ஆனால் அதை ரூபம் என சொல்லக் கூடாது, சொல்லவும் முடியாது.

ரூபம் என்றால், இயக்கமே! அதன் குணமும் வெண்மை.


பிரணவமோ! அதனால் வந்த தோற்றமும் இருப்பும்!

யோகமாயா! உடையதாகும் என உணர்க.

பின் யோகமாயா (ஒளி & சக்தியால்) அப்பாதை கருக்கு, வடிவம் (ரூபம்) கொடுக்க, அதை திரிகர்த்தாக்கள்! என அறிந்து. அப்படியானால்?

பிரணவம் என்ற சப்தத்தில் (ஓசையென்ற நாதத்தில்) தோன்றியவர்களே (உண்டான ரூபங்களே) திரிகர்த்தாக்கள் என்பது சத்தியமாகிறது.

இதை வைத்து உணருமிடத்து, நாமத்தின்! பின்புதான் ரூபம்! உண்டானது என ஸ்ரீமஹிரானிதாள் சொல்வார்.



பெரும் போது (124)
ஜகஜீவ
பரக்கிற பரம் பொருள்
தானாக மாறும்போது
உலகம் இருப்பு
உடையதாக தோன்றிற்று.
இதுவே நாம ரூப
ஜகம் வந்தவிதமாகும்.

வெறுமனே உள்ள தோற்றம் இருப்பைமட்டும் உடையதாகும் அத்தோற்றம் ஓர் நாமம் ஒன்றில் குண இயக்கம் சேர்ந்து இயக்கம் உடையதாகும்.

இந்த நாமரூபம் என்பது தெய்வ நிலைக்கும்! அதை அடுத்த பர நிலைக்கும்! மட்டுமே பொருந்தும். அது ஜகநிலைக்கு அதாவது **மனோ** நிலைக்கே பொருந்தாது.

அவ்விரண்டும், அறிவின்றி! இவ்வொன்றும் மனோநிலை! இம்மனதின் இயக்கமும்! அதன் குணமும்! கண்ணால் கண்டாலே நம்பும். கண் காணாததை மனம் நம்பாது.

ஆகவே இம்மனமானது, ஓர் தோற்றத்தை ரூபத்தை உண்டுபண்ணி, இது இதால் ஆனது. இன்னது செய்யும்! என்ற **குண**! கற்பனையை, உண்டுபண்ணிய பிறகே அதற்கு இசைந்தாற் போல், ஒரு பெயரை ஓர் **நாமனை**வைத்து, என ஸ்ரீமஹாராஜ் அவர்கள் வாயிலாக அறிகிறோம். ஆகவே இயற்கையானது நாமம் ரூபம் கொண்டது. செயற்கை ரூபம் நாமம் கொண்டது என அறிக. (உண்மை) இயற்கையான் சிருஷ்டி மஹேசன் சிருஷ்டி ஆகும். செயற்கையானது மனித சிருஷ்டி ஜீவ சிருஷ்டியாகும் என உணர்க.



காரசாரம் என்பது குண தோஷங்களாகும்.

நாமரூபம் இல்லையானால் மனம் இல்லை. (126) மனம் இல்லையானால் நாமரூபம் இல்லை. நாமரூபமும் மனமும் இல்லையானால் ஜீவர்களின் **ஞானசார** கிரியாட்டை இல்லை. என உணர்க.

இனி உன் கேள்வியின் பதில் உரைவம்.


ஜக ஜீவ, மற்றும் அசேதனம் **நாமரூபம்!** இல்லையானால் **மனம்!** இருக்க முடியாது. இயங்க முடியாது. புண்ணிய பாப பிறப்பு உண்டாகாது. அப்பிறப்பின் குண தோஷம் இருக்க முடியாது. அதனால் மனவிகிரியாட்டின் **காரசாரம்!** இல்லாமல் உடம்பில் இல்லாமல் சுவாரஸ்யம் என்ற **ஞானம்!** இல்லாமல் போய்விடும்.

முடிவாக சொல்வதானது?

நாமரூபம், இல்லையானால், **மனம்!** இல்லை. மனம் இல்லையானால் **நாமரூபம்!** ”

இது ஆதிபரிசுஹான்களின் அனுபவவாக்கானம்.

② கேள்வி:- **நாமம் எ...ல்...லா...ம் க...ட...ந்...த...சுவாமிகளே** என்ன?



சமுத்திரத்தில் எவரும் உப்பைக் கலந்தவர் இல்லை. அது இயல்பாகவும்! வாஸ்தவமாகவும்! உள்ளது. உப்பை கண்ணால் காண முடியாது. ஆனால் சுவைப்பவரே உணர்வர். ஏனையோருக்கு அதை வரி & வாக்கால் விளக்க முடியாது. உப்பு உண்மை ஆகவே தோன்றுது.


126

அதன் ஓர் மறைந்தான உண்மை! என்னவென்றால்?

முந்தையது **நாமம் ஓம்** என்றும்; பிந்தையது **ரூபம்!** தூல/சூட்சும வடிவம் என்றும்; சொன்னோம். இதை வைத்து உணருமிடத்து, காலாந்த **பரமாத்மா!** தம் அம்சமான **மாயாவை ஒலியை** தோற்றுச் செய்து விட்டு, பின் சூட்சும **ஈசு!** வடிவத்தையும் அதன் பின் தூல **ஜீவ!** வடிவத்தையும் **தான் தாமே** தமக்குத்தாமே தோற்றுவித்துக் கொண்டதை ஞானிமார்கள் மாயமாக அறிவோம்.

சூட்சுமம் = தோன்றும்! மறையும்!

தூலம் = தோன்றும்/ சிலகாலம் இருக்கும்/ பின் மாறும்!



இதன் உண்மை
உப்பு (127)
என்பது நாமா
மட்டும் உண்டு.
காணும் நீரியில்
உப்பு இல்லை. அதை
போல காலாதீத
பரமும் எங்கும் நீக்க
மற நிறைந்திருக்கிறது
அது இல்லாத பொருள் இல்லை. அப்பொருளாய்
அது இல்லை. ஆகவேதான் நாமம் கடந்தது
என ஸ்ரீ மஹான்கள் சொல்வார்.

அதன் பின் மறையும்! இப்படி மாறி மறைவது!

என்பது, புதிதாக! தோன்றுவதற்காகவும்.

மாறி மறைவதை, அழிவு என சொல்வதுண்டு.

பழையன கழிதலும்! புதியன தோன்றுவதுமாகும்.

நாமரூப

பந்தத்தாலேயே! இக்காரியம் நடைபெறுகிறது.

அதைச் சேர்ந்தே! அப்படியல்ல. பந்தப்பட்ட

ஜீவன்! கடைத்தேறுவதற்காகவே, பந்த ஓர்

சூட்சும வடிவமாகும். இந்த சூட்சும வடிவமும்! அந்த

ஓசையிலிருந்தே ஓம் காரத்திலிருந்தே வந்ததென்றும்!

அப்படியானால், நாமம் எல்லாம் கடந்து நின்றது.

என்பது,

சுத்த தாவரத்த பரத்தை குறிக்கிறதென்று ஸ்ரீ மஹான்கள் சொல்வார்.



உபநிஷத் என்றால் 128
உன் ஸத்குரு
வாக்கிய மாலை
உன்னை தன் இயல்பான
தன்மையால் உன்
நோக்கி தாங்கும்
அதுவே உபநிஷத் ஆகும் என உணர்க.

வாக்குக்குத் துக்கம் என்று உபநிஷத்!
உண்மை உரைக்கும் என்றால்
சிவரகஸ்யத்திற்கு! இந்த
உபநிஷத் முந்தையதா? பிந்தையதா?
இதில் ஓர் உண்மை அடங்கி இருக்கிறது.
உபநிஷத் என்றால்:- உப+நி+ஷத்
அதாவது ஸத்குருவின்! உபதேசமானது!

கொழுந்தே! நீ! ஸத்தானவனே! என
ஸத்திய பிரமாணமாக கூறுவதாகும்.
இவ்வாசகம்! சிவரகஸ்யத்தில் ஸத்குருவானவர்
நம்
ஸத்சிஷ்யனுக்கு கொடுக்கும் ஸத்திய வாக்காகும்.
உறுதி மொழியின்



இவ்சூத்ரம் உபநிஷத்
என்றவாக்கியம்
எதை அடிப்படை (129)
யாக கொண்டு
என்றால் - 44 அத்
யாயங்கள் கொண்ட,
ஸ்ரீமத் ரிபு கீதையை,
எளிய தமிழில் உருவாக்கி
தந்த ஸ்ரீ ம ஹா த் மா வா ன

இதை அடிப்படையாக கொண்டே, ஆதி! ஸ்ரீமஹாத்மாக்களும்! கலியுகத்தில் தோன்றிய அத்வைத ஸ்ரீமஹாத்மாக்களும்! ஸ்ரீ மஹான் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களும்! அவருக்கு, முன் பின் வந்த, அத்வைதிகளும்! அனேக ஆங்காங்கே, குருசிஷ்யபாவனையில், உரையாடல் ரூபமாக, கொடுக்கட்டே குறிப்பிட்ட

**பத்து உபநிஷத்**/ ஆனால் அதில் **மாண்டூக்யம்**/ ஒன்றே தலைசிறந்தது என, ஸ்ரீ அத்வைத மஹான்களால் ஏற்கப்பட்டது. இங்கு ஸ்வய ஞானானுபவ நூல் சூத்ரம், இந்த ஓர் வாக்கியம்:- தெரிபொருள் நூல் வழியால் அறிந்த பின்னர்; தெளிவித்த நூல் மொழியே மீண்டும் (மீண்டும்) தொன்றல்;



# பரிபிச ஞானம் திங்கள்!

(130)

இக்கலியுகத்தில் உள்ள பக்குவ ஆன்மாக்கள் கடைத்தேறும் நிலைக்காத உபாயத்தை

உரைத்ததன் பயன் **வாக்கு!**

துக்கம் தானே? என உபாயத்தைச் சொல்கிறது.

என்கிறார் எம் ஸ்ரீபுமை உத்மா. இதை சொல்பவர்

பின் வரும் பாடலில், என்ன சொல்கிறார் என்றால்?

**மனியை!** எடுத்துக் கொண்டு **புதர்கள்!**

தள்ளி விட. என்று நியியில்

(சாதகமான நால் தன்னாலே)

**வாதகமாம்!** நால் எல்லாம் தன்று என்றும்;

அனுபவம் உள்ள நால் மட்டும்;

பின் வருந்தியுமே அநுபாதகம் இடைவிடாமல்;

**போதுமா!** சாதகமாய் நிச்சியாசம் பண்ணு

என்கிறார். இதன் உட்பொருள்.

(A) பழிப்பு தோடு நின்று விடாதே.

(B) கருத்தை உணர். உள் நோக்கி செல்.

(C) உள்ளே சென்றால் உன்னால் வெளியே வரமுடியாது



பாடம் / படிப்பு
அனுபவம்
கூடும் போது
தானே நின்று விடும்.
நீ நிறுத்த முயற்சி செய்தால்
நீ படிக்க வில்லையென்பொருள் ப

என்ற உண்மையான வாக்கிய விளக்கத்தின் படி! (13)

இன்றைய உயர்நிலைப் படிப்புகளும் இவ்வாறு கூடுகின்றது. என்று அன்றைய உப நி ஷ த்தை குறிப்பாக கிறதென்று பொருள் கொள்ளல் வேண்டும்.

அதாவது?

(D) சாப்பிடுபவன் பேசமுடியாது.

(E) சாப்பிட்ட உடன் தூங்கி விடுவான்.

(F) பின் பாடம் படிப்பு எங்கே? பின் விளைவு என்ன?

(G) **போகுமுன்**:- ஸ்வய அனுபவம் பெற வேண்டு மனால்,

பொருந்துவதை **வருந்தி** அதிசிரத்தையுடன்!

கடின உழைப்புடன்! வெகு வெகு பிரயாசையுடன்!

**தர்கவளசக்தி**யுடன் செய்து

அனுபவத்தை கூட்டுவோமாக. அங்கு படிப்பு


தானே நின்று விடும். உன்னை படிக்க முடியாது.

படிக்க இயலாது. ஆனந்தத்தில் மூழ்கி விடுவாய்.



இது இன்னா
இது இன்னா (132)
இது அது!
என்ற பேத ஞானம்
தோன்றும் வரை! ஸத்
பாராயணமும், அவசியம் மனதுக்குத் தேவை.
விசாரமும் அறிவாளன் தேவை இல்லை.
மனம்

அனுபவம் கூடும் போது, நீ படிக்க முடியாது!
நீ படிக்க இயலாது. காரணம் குற்ற உணர்வின்!
மனம் | உன்னிடம் இராது.
எங்கும் அமைதி! சாந்தி! ஆனந்தம்!
இயல்பாக தோன்றும். உறவு, சுற்றம்! நட்பு!
இவர்களிடம் விகாரமும் | விவகாரமும்!
மறைந்து, எல்லோரும் நல்லவர்களாகவே
மாறி விடுவார்கள். சொல்லப் போனால்,
பதுமைகள்! விளையாட்டாகவும்! திட்டம்
போட்ட காரியங்கள்! ஒழுங்காக நடைபெறு
கின்றன என்றும் தர்ம காரியங்கள்!
பாப கூடு! தோஷம் இல்லாமல்,
எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன என்ற
சாட்சி | பாவனை இயல்பாகவே வந்துவிடும்.
அதற்கு பரியந்தம், ஸத் விசாரமும் / பாராயணமும்
அவசியம் தேவையென மகான்கள் சொல்வர்!




81

மனதால்! செய்வது எது?

தாவத்தால்! ,, ,, ?

மனம் சூட்சுமமாகும். அது எண்ணவடிவமாகும். தாவம் காணும் நிலையில் காமவான் முன் உள்ள செயல்! வடிவமாகும். அதன் ரகசியம்! என்னவென்றால், தாவ அசைவை வைத்து, மனம் கற்பனை பண்ணி நினைக்கும். அத் தாவ! காரண காரியம், காண்கின்ற மனதிற்கு தெரியாது. தம் கற்பனையையே உண்மையென நம்பும்.

இப்படி கற்பனையால் பெருகும் எண்ணமே, இம்மனதை பிடிக்கும். இப்படிப்பிடிக்கும் எண்ணத்தால், இம்மனம்! வினையை சேகரித்துக் கொண்டது. அதுவே புண்ணியபாவமாகவும்! ஜனனமரணமாகவும்! தொடர்கிறதென்று உணரவும். இந்த ஒருமையை சர்வாதிபதனை இருந்தால், இவ்வினை தொடராது. பிரதாவங்களை நோக்கும் மனமும் மறைந்து போகும்.



மனோ| நாசம் (134)

ஆகாமல் ஜக|

ஐக்கியம் பெற முடியாது

ஜக ஐக்கியம் பெறாமல்

(82) ஆயபர ஐக்கியம் பெற முடியாது

(A) ஆயமனோ| நாசம் எப்படி செய்ய வேண்டும்?

(B) ஆயஜக| ஐக்கியம் எவ்வாறு கூடும்?

(C) ஆயபர| ஐக்கியம் எப்படி நிலை வரும்?

(A) ஆயமனோநாசம்:- நாம ரூப ஜக ஜீவ தோற்றம் அனைத்தையும், இயக்கம் அற்ற ஜட சொரூபமாக மாற்ற வேண்டும். இதன் அப்யாசம், சர்வாரம்பணம் ஆகும்.

(B) ஆய ஜக ஐக்கியம்:- நாம ரூபம் அனைத்துமே செயலற்ற ஜடசொரூபமாகி விட்டால், புண்ணியமாய குண தோஷம் நாசமாகும். இதனால் எல்லோரும் நல்லவர்களாகவும்! நம்மவர்களாகவும்! நடப்பது அனைத்தும் நலமாகவும்! இயல்பாக மாறிவிடும். இதனால் ஜக ஜீவ மாறுபாடும்! வேறுபாடும் நாசமாகி எல்லாம் ஒன்றே என்ற ஐக்கியம்| பெற முடியும்.

(C) ஆயபர ஐக்கியம்:- இங்கு உன் ஸத்குரு அருளும் பிரம்மார்ப்பணத்தால், எல்லாம் மனம்/ஆகி| அதுநானும், நாம் அது! என்ற ஆயபர ஐக்கியம் சகஜானந்தம் ஆகும்.



இ ஸ்ரீபகவானானவன் மாயானை 135 வைத்துக் கொண்டு ஜீவ ஸ்ருஷ்டியையும் பக்குவ ஆன்மாக்களுக்கு மனோ பரிபாக முடிவு செய்வதால்தான் ஸ்ரீ ஸத்குரு பரமாய் ஜீவன் முக்தியை கொடுக்க முடியும்.

83

நாமரூப! ஸ்ரீபகவானுக்கும்! பரத்திற்கும்! என்ன வித்தியாசம்? நாமரூப மற்ற

நாமரூப ஸ்ரீபகவான்! அறிவின் சொரூபமானவன். அவன் சூட்சும நாம ரூபமாகவும்; மாயானை! உடையவனாகவும் இருப்பதால் ஜீவ! ஸ்ருஷ்டியும் ஒன்றே! அவன் காரியமாகும். மனதை உடைய மனித ஜீவன்! தன் அறியாமையால் சேகரிக்கும், புண்ணிய பாவ கர்மானை! வினைகளை ப்ராரப்தபடி கூட்டவும்! குறைக்கவும்! அழிக்கவும் (பரிபாலனம் செய்யவும்) துணை தாங்கியால் முடியும். அதன் பிறகே, பரசொரூபமாகிய ஸத்குரு! அவ்வினையை, எரிக்கவும்; மேலும் வினை சேர்க்கும் மனதை! மனதாக்கி, ஜீவன் முக்தியை அடைய செய்ய முடியும். பரமே ஸ்ரீபகவானாக! வருவதால், ஸ்ரீபகவான் இல்லாமல் விஷ்ணு பரிபாகமும் பரம் ஸ்ரீஸத்குரு இல்லாமல் மனம் மனதாகவும் முடியாது.



ஓ

கலியுகத்தின் காம களியாட்டங்கள் 136

அவர்களின் ஆடம்பர செய்கையான கவிர்ச்சி சாலி! ஆஸ்பத்திரி! உணவு விடுதி! முதலிய தர்ம ஸ்தாபனம் எதைச் சொல்லும் சேவை எல்லாம் சேவை ஆகாது

84

# காமக்காஞ்சனம்! பற்றி.

## எம் ஸ்ரீபரமஹம்ஸர்! சொன்னது.

அன்பான திருவடி :- இக்காம, காஞ்சனம்! என்னும், பெண்ணாசையும்! பணத்தின் மோகமும்! என்ன செய்யும் என்பதை, எம் வாக்காக! நம் அன்பு குழந்தைகளுக்கு புகட்டி இருக்கிறோம். அதில், முக்கியமான ஒன்று, இக் கலி யுகத்திற்கென்றே! சிறப்பான அம்ஸமாகும்.

நீயே கவனிக்கவும்.

பணம்! பாதாளம் வரை பாயும்!

என்றவ், அதன் பொருள் :- அதலபாதாளம் ரௌரவாதி நரகம் வரை செல்லும் என, பொருள் கொள்ள வேண்டும். மற்றைய மூன்று யுகங்களிலும், பொன்னும் பணமும்! இவ்வளவே இல்லை.



கண் துடைப்பு 137

வேல் யாக

நடைபெற்ற அவர்கள்

கவனக் குறைவால்

நடைபெறும் பழிபாவம்

தப்புதவறு / குற்றம் குறை /

பெண் & புண் விளையாட்டு

எப்பாவம் மறைக்கப்படுமோ ஆனால் மறுக்க முடியாது

பொன்னை மண்ணாகவும் / மண்ணை பொன்னாகவும் /

இருந்தது என உணர்க. மேலும் இப்பொன் இத்தகவியால் ...ணும்

பணமும் / இன்றைந்த திலியில். ↑

மோகத்தை / காட்டி பலவந்தமாக

இழுத்து காமம் என்னும் விறகு /

வாகனத்தில் ஏற்றி, புண்ணிய பாபத்

இணைத்து, போகம் என்னும் தை!

புகைசேர்ந்ததில் / ஜனனமரணம் &

நரகத்தில் ஆழ்த்தும் காமாக்னி

என உணர்வாயாக. உணர்த்துவாயாக. என்றார்.

நம் குழந்தைகளுக்கு



இக்கலியுகத்தில் 1328

எல்லா பாப காரியங்களையும்

பணம் திரையிட்டு மூடிவிடும் அது மட்டுமல்ல வென்ற நாம் ஒருவர் கூட மற்றும் பக்கத்தில் காண்க

மேலும் ஓர் உண்மை யாதெனில்?

கொடுந்தே திருவடி / கலியுகத்தில், கல்வி பணத்தால் மறைந்து விடும் மறைக்கப்படும்

பாடம் & படிப்பு / பட்டம் / பதவி / அந்தஸ்து கௌரவம் / புகழ் / கீர்த்தி / என இவை அனைத்தையும்


பணத்தால் / பெறலாம் அப்பணத்தாலும்,

பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம், புகழ், கீர்த்தி, இவைகளாலும் காமகளியாட்டம்

முதலிய, இன்ப போகத்தில் மூழ்கித்திளைக்கலாம்

நாம் செய்யும் தப்பு தவறு / பழிபாவம் / குற்றம் குறை

இவைகள் திரையிட்டு மூடி / மறைக்க முடியும் ஆனால்...... முடியாது?




நான் என்பது துவைத பயம் ஆகும்.
நாம் என்பது ஸ்ரீவைத வாதியும் இச்சைத்த விஷிஸ்டாத்வைத பயம் அற்ற நிலையாகும்.
யாம் என்பது எந்த இரண்டும் இல்லாத அத்வைத நிலைத்த ஜீவன் முக்தியான நிலையாகும்.
வரிசையாக ஏற்கவும்.

நான் என்றும், நாம் என்றும், யாம் என்றும், சொல்லும் வார்த்தையானது, எதை குறிக்கிறது? அதன் பலன் என்ன?

(A) நான் :- இது அஹங்காரத்தின் ஜீவ! கர்த்தத்துவ நிலையாகும். இது கர்மாவின், பெருக்கம் ஆகும். இது ஜனன மரண வித்தாகும். இதுவே, மனம், விரியாகிறது. இது இல்லை என்றுமில்லை (இல்லை என்றால் இயக்கம் இல்லை) இல்லை.

(B) நாம் :- இது ஈசன் நிலை ஆகும். இது ஈசனின் விஷிஸ்டாத்வைத நிலையாகும். இதனால் ஜீவ பந்தம் நாசமாகும். இது ஆனந்த நிலையாகும். இது இன்ப துன்பம், நாசமான நிலையாகும்.

(C) யாம் :- இது பர நிலையாகும். இதில் துவைதமும், விஷிஸ்டாத்வைதமும், நாசமாகும். இது அத்வைத நிலையாகும். ஜீவன் முக்தியை அனுபவிப்போமாகும், இதை ஸ்மரிக்கவாம்.



சர்வார்ப்பணம் 140

ஒன்றே
இதன் மூலம் ஆகும்.
ஜீவ வேஷமிட்டு
அந்தந்த பாத்திரங்
களில், அவனே
தம் மாயா வால்
நடிக்கிறான் என பக்தியமாக உணர்ந்து
விட்டால் மறுக்ஷணம் அவனை தரிசிக்கலாம்.

86
இரு குணமும் இழந்து! அமல ஸத்வம்
மேலாகி! சூக்ஷ்ம மனோவிருத்தி! கொண்டு,
ஸ்ரீபகவானை காணலாம். என்றால் அதன் பொருள் என்ன?
ரஜஸ், தமஸ் என்ற இருகுணமும் நாசம் ஆக
வேண்டும். இவ்விரு குணங்களின் இருப்பும்
இயக்கமும்! நாமரூபமாக காணப்படும்
லோகம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! இப்படி
கோடி கோடி குணங்களாய் காண வேண்டாம்.
ஸத்வம் என்பது ஒன்றே! அதை சர்வார்ப்பணமாக
கண்டு அனுபவிப்பது, அமல ஸத்வம் ஆகும்.
சூக்ஷ்ம மனோவிருத்தி என்பது மனம்! அறிவான நிலை!
இப்படி மூன்று நிலைகளில், நாமரூபம் அனைத்தையும்
நல்லவர் & நல்லவை & நடப்பதும் நலமே!

இப்படி மூன்று நிலைகளையும், ஒன்றாக்கி உணர்ந்தால்,
84 லக்ஷம் ஜீவ கோடிகளையும். அவனே
அந்தந்த ஜீவ வேஷமிட்டு, நடிக்கிறான் என
உணர்ந்து, அறிவு நிலையில் கூர்ந்து நோக்கினால்
எங்கும்! எதிலும்! எந்நிலையிலும்! அவனை தரிசிக்கலாம்.



ஓர் சாதகனியானன்
பேச்சை (41)
துறைத்து! துறைத்து
நியுத்துவாதகில்
அவனுக்கு மட்டும்
நாமரூப ஜகஜீவ
சொந்த பந்த உறவு!
தோற்றம் அழிவுதுமதுமையாகவும் பின்
மண்ணாகவும் மாறும் - இதன்சாதகம் சர்வாங்கமானம்
ஆகும்.

(87)

ஜகம் (நாமரூபம்) விவகார லக்ஷயம்!
என்றால், அதன் விளக்கம் என்ன?
நாமரூப ஜக ஜீவ, அழித்து தோற்றங்களியும்!
இந்த மனம் படைத்த மனிதன்! மட்டும்
பேசிப் பேசியே! விளக்கம் கொடுத்தும்
விளக்கம் பெற்றும் இல்லாத ஜட சொரூப
ஜகத்திற்கு உயிர் கொடுக்கிறான்.
(வாக்குவெளியாறுவி ஜகம் இல்லை)
உண்மையில் ஜகமோ! ஜீவனோ! மற்றும் அழிவும்
மண்ணும் ஒரு மண் மதுமைமதுரும் அரும் என உணர்க
மௌனம் கவகநாஸ்தி! என்பதை ஸ்வய அநுபவ
நிலையால், ஒருவன் அநுபவிப்பானாயின், இச் ஜக
இருப்பும்! இயக்கமும்! அவனுக்கு மட்டும்! இல்லாது
மறையும். எல்லாமே ஜடமாகிவிடும்.



இவ் வருத்தமும் (44)
மாயாவி
என்றவட்டமும்
ஜக வால கோசு
வழக்கு வழக்கு
தொடர்ந்து நோயாளி!
வந்தது எதை உணர்க்க

88

வருத்தம்! இது என்பது எதுவோ?
ஆறுவ்?
தோன்றுவது ,, ?
,,
வழுவுற்ற மாயாவி! மனம் என்பது ,, ?

இதன் உண்மையை நேரமாக உரை வேண்டும். வருத்தம்! கஷ்டம்! கவலை! துன்பம்! துயரம்! ஆகியவை இவ்வவே இல்லை. இது மனோ விகார விவகாரம் ஆகும். உன் பிராப்தம். என்பது ஒரு சுகமான கர்மாவே. அது பாரமானதும் அது அழுத்துவதும் நான்! எனது! ஆகும். மேலே சொல்லிய துன்பத்தை இம்மனம் தானே வலிய ஏற்றுக் கொள்கிறது. துன்பத்தை இம்மனம், எப்படி வலிய ஏற்கும்? என கேள்வி எழுவாம்? இத்துன்பம் வரகாரணம்:

(1) எதிர்பார்ப்பு! அதனால் ஏமாற்றம்! அதனால் தடுமாற்றம்! அதனால் துன்பம்.

(2) ஒழுக்கவீனக்கிறவ்! வருகை போட்டி & பொறாமை! அதனால் துன்பம்.

(3) சர்வாதிபத்யம்! வாக்கில் உண்டு. அனுபவத்தில் இல்லை! அதனால் துன்பம்.



இ பாவத்தை

மூர்க்கவன சக்தியை நாசம் செய்து! (143) தூர்க்கவன சக்தியில் நடையற்ற அப்யாசம் தொடர்ந்து செய்தால், மாபாவி மனைமாகி ஜீவன் முக்தியும் அவசியம் பெறும்

(4) சொந்த / பந்த / பாச / வாழ்வின் / அதிக பிடிப்பு. அகலவே துன்பம்.

(5) பாசம் / பிடிப்பு / பட்டம் / பதவி / அந்தஸ்து / கௌரவம் / அகந்தை / கீர்த்தி / பணம் / மோகம்! அகலவே துன்பம்.

(6) மக்கள் சேவையே மகேசன் சேவை யென, (நீந்தத் தெரியாதவன் நீந்தத் தெரியாதவனை க ரை சே ர் க் க முயலுதல்!) அகலவே துன்பம்.

இப்படி ஜீவ / காந்த தத்துவத்தால் இந்த மனம் / பாவங்களை (துன்பத்தை) செய்து மாபாவி என்ற பட்டம் பெறுகிறது. இந்த மனமே பாரமானது, மனமே / மனதுக்கு / கனக்குதானே / ஈர்ப்பு சக்தி கொண்ட பாரம் / அதன் இப்பாரம் நீக்க காந்த தத்துவத்தால் தான் (சர்வார்ப்பணத்தால் தான்) நாசமாகுமே யல்லாது, வேறு மார்க்கம் இல்லை.




நாமரூப ஜக ஜீவ எண்ணத்தால் ஜீவ கர்த்தத் துவம் உண்டாகும். இதை சர்வார்ப்பணத்தால் நாசம் செய்து நினைவற்ற நிஷ்டை அடை. ஸ்ரீபகவானின் சூட்சும நாம ரூப பிரேமையால் ஈச கர்த்தத் துவம் உண்டாகும். அதை பிரம்மார்ப்பணத்தால் நாசம் செய்து நினைவற்ற நிஷ்டை அடை.

89

# நினைவற்ற நிஷ்டை கூடுவது எப்படி?

நாமரூப, ஜக ஜீவ, உறவு! சுற்றம்! நட்பு! இவைகளின், எண்ண பின்னலினால் ஜீவ பந்தம் உண்டாகும். சூட்சும ஸ்ரீ நாமரூப ஸ்ரீ பகவானை எண்ணி பிரேமை பக்தி ஆனதால், ஈச பந்தம் உண்டாகும். இவ்விரண்டும் எண்ணமே! முந்தையது ஆவரணம் ஆகும். பிந்தையது மோனம் ஆகும். இவ்விரண்டினாலும் நிஷ்டை கூடமுடியாது. இவ்விரண்டையும் தடுக்க வேண்டுமானால், ஆவரணத்தை நாமரூபத்தை எண்ணத்தால் வெறுக்க வேண்டும். இது சர்வார்ப்பணம் ஆகும். பின் மோனம்! ஸ்ரீபகவானையும் எண்ணத்தால் மறக்க வேண்டும். இது பிரம்மார்ப்பணம் ஆகும். எவ்வாறு மறக்க உணர்ந்து விட்டால், நிஷ்டை படும்! மனம் & அறிவு முயற்சி இன்றி நிஷ்டை கூடும். என பொருள்படும். மண் எப்படி செயலற்றதோ அப்படி நீயும் சொல்லும் செயலும் மறந்து சும்மா இருக்கலாம் அப்போ நினைவற்ற நிஷ்டை ஆகும்.



எல்லோரும் எல்லாமும்!
நல்லவர்களே (145)
என அனுபவம்
ஆகிவிட்டால் நாமரூப
பேதமும்! அதன் இயக்க
குண பேதங்களும் சர்வ
விருப்பு வெறுப்பும்
நாசம் ஆகும். பேதம் நாசமான விருப்பு வெறுப்பும்
நாசம் ஆகும். அதனால் குற்றம் குறையும் சர்வநாசம்
ஆகும்.

90

**பேதம்!** அறுபட என்ன செய்ய வேண்டும்?

பேதம் என்பதே, முதலில் நாம ரூபம் ஆகும்.
" என்பது இரண்டாவது குண பேதம் ".
மூன்றாவது தோற்றத்தால் வருவதாகும்.
நான்காவது இயக்கத்தால் ".
ஓர்சாதகனுடைய, இயக்க **குணமே** முன்நிற்கும்.
அந்த இயக்கத்தை முதலில் மாற்றி அமைக்க வேண்டும்.
இதன் சாதகன்! எல்லோரும்! எல்லாமும்! **நல்லவர்களே!** நல்லவர்களும்! நல்லவைகளும்! இல்லையே இல்லை
என உறுதி நிச்சயம் செய்ய வேண்டும்.
நடப்பது நலமே! எல்லோரும் நல்லவர்களானால்,
எல்லாம் **நாமரூப** பேதமற்ற **வெண்மை**கள்!
அவசியம் ஆகிவிடும். இதன் சாதனை சர்வானந்தமயமாகும்.
இப்படி இருநிலைகளிலும், பேதம் அறுபட்டால், அங்கு
விருப்பு வெறுப்பு நாசமாகும். அதனால் குற்றம் குறை
நாசமாகும். அந்நிலையில் இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என்பது அனுபவ சாத்தியமாகும்.
அங்கு பேதம் இல்லை.



நற்போத (146)

சாதனியும் தம் ஸ்வய அனுபவத்தால் ஆரண நிறைவாகி நற்பத பரமாத்மாவும்! மாயா என்ற கவசம் இவ்வாறு பரம் பொருளும் ஞானம் ஆக வேண்டும்

91

# நற்போதமும் ஞானியமாய்!


## குற்றம் குறை தீர்வது எவ்வாறு?

நற்பதம்! என்றால், ஸ்ரீபரமாத்ம சொரூபம். இது ஞானி! நிலையாகும்! இதுமாயா சம்ப நீதம் கொண்டதாகும். இது ஸத்வ குண சொரூபம்.

நற்போதம்! என்றால், அம்பரமாத்ம நிலையை பெறும், ஸாதனா! ஆகும். இந்த ஏககுணமாகிய, ஸத்வகுணம் இருந்தாலும், ஜீவ! கர்த்தத்துவம்! இருப்பதால் இதுவும் ஓர் குறை! பட்ட இடம் என்று ஸ்ரீமஹான்கள் சொல்வார்.

ஆகவேதான், நற்போதமும் ஞானியமாக வேண்டும்.


நற்பத சொரூபமாகிய, (ஏகன் நிலையாகிய) பரமாத்மாவும் ஸ்வானுபவ பரம்பிரம்மமும் ஆக வேண்டும்.



கர்மாவை தகனம் (147)
பண்ணவே ஞானக்கினி
தான் ஆய் தோன்றும்
கர்மா முடிந்தவுடன்
ஸ்வய அனுபவத்தில்
தோன்றிய அக்கினி

99. ஸ்வய அனுபவ ஞானத்தில் ஸாக்ஷியாகும்.
அதுவே ஜீவன் முக்தி என்று ஞானிகள் சொல்வர்.

விறகு முடிந்து அக்கினி ஸாந்தி ஆவது.
இவ்வுவமானம் எதைக் குறிக்கிறது?
அக்கினியின் ஸ்வபாவமானது, ஓர் பொருளை
எரித்து, சாம்பலாக்கும், நிமித்தமாக தோன்றும்.
அவ்வது தோற்றுவிக்கப்படும். ஒன்றுடன் ஒன்று
உரசுவதால் தானே தோன்றும். அவ்வது ஒரு பொருளை
எரிக்கும் நிமித்தம், தோற்றுவிக்கப்படும்.
அக்கினி எவ்வழி வந்தாலும் தம் பற்றிய பொருளை
சாம்பலாக்கி முடித்தவுடன், தானாய்!
ஸாந்தியாகி மறைந்துவிடும். அத்தன்மை போல்
பிறவி போகமே ஓர் தேகம் (உடல்) கண்டாய்.
வினைதான் ஒழிந்தால் பிறவி போதாவும்
நில்லாது கண்டாய்.
என்றிட்கள் அனுபவ ஞானிகள். அதே போல்
இந்த சரீரமும் எக்கர்மாவையும் நீறு ஆக்கத்தேறா,
அக்கர்மா முடிந்த மறுவினாடியே, சரீரம் மண்ணோடும்.
அல்லது சாம்பலாகும்/ அணுவாகும்/ ஆகாசமாகும்/ பரமாத்மாவாகும்
பரம் பொருளாகும். அதுவே ஒன்றே ஆகிவிடும்.



ஸ்துதி! தியானம்!
சந்தன திலகம்!
திருநாமம்! (148)
துளசி & ருத்திராக்ஷம்

அணிகலமும் அங்க
சுத்தியில் அடங்கும்
இதைவிட சித்த சுத்தி

93

ஸ்திரமாகும் அமைதி! சாந்தி! மௌனம்! ஆனந்தம்!

# அங்க சுத்தி! சித்த சுத்தி! ஞான!

சுத்தி இம்மூன்றையும், சற்று விளக்கவும்!

(1) அங்க சுத்தி - சரீரம் & உடை & ஆகாரம்!
இம்மூன்றும், சுத்தமாகவும்! மிக மிக எளிமையா
கவும்! ஆடம்பரம் **தவிர்த்து** நியமமாயும்!
பிறரை திருப்தி படுத்தாமல்! தம் நியதியில் திருப்தியம்
வெளிவுலகில் எவருக்கும் காட்டாமல் அடங்கி
கலியுக
ஓர் **ஸாதுவாய்!** துறவியாய் அல்ல

மடி! ஆச்சாரம்! அனுஷ்டானம்! ஜெப ஓதிய
விதி முறை, கட்டுப்பாடு! அதிகாலை துயில் எழுதல்.
மாலைக்கடன் சூரியன் இருக்கும் போது செய்யும்!
**ஜீவகாருண்யம்!** எவ்வுயிரையும் தன் உயிராக மதிப்பது
இப்படி தம் சரீரமும்! சரீர புறச் செயல்களிலும்,
கவனமாக இருப்பது. அங்க சுத்தி ஆகும்.



இயல்பானவுடன் (149)

அங்க சுத்தி நின்று விடும். மேலே சொன்ன நான்கும் சித்த சுத்தியின் ஸ்வய அனுபவம் ஆகும்.

ஞான ஸித்தி ஆனவுடன், அவ்வாறும் இயல்பாகவே நித்யமாகும்.

(2) சித்த சுத்தி:- மேலே கூறிய அங்க சுத்தியே! சித்த சுத்தியின் அஸ்திவாரம்! ஆகும். சித்த சுத்தி என்பது பக்தியின்! ஒழுக்க கட்டுப்பாடு ஆகும். பூஜையது புறச் செயல்! பூஜையது அகவுணர் வாகும். இங்கு உபசார பக்தியை குறிப்பிடவில்லை. உள் உருக்க! பக்தியை, குறிப்பிடுகிறோம். மனம்! புத்தி! சித்தம்! இம் மூன்றுமே ஒருமித்து செய்யும் காரியமாகும். இதனால் மனம் தூய்மை அடைகிறது.

(3) ஞான ஸித்தி:- மேலே கூறிய, இரண்டையும் தாண்டி! அனுபவ ஞானம், ஸாத்தியமாகும். இதை நீதியில் வரிசைக் கிரமமாக, சொல்வது என்றால், பூ! என்றும் காய்! என்றும் பழம்! என்றும் சொல்லலாம். பூ இல்லாமல் காய் இல்லை. காய் இல்லாமல் பழம் இல்லை. சித்த சுத்தியின் சர்வார்ப்பணத்தால் தான்! ஞான ஸித்தியின் பரம்மார்ப்பண அனுபவ நிகழும் என உணர வேண்டும். பக்தியும்! ஞானமும்! அவஸ்யம் என உணர வேண்டும்.

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!